மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கூடுதல் பணி என்ற பேச்சுக்கு இடமே இல்லை. காரணம் தேவையான அளவிற்கு, சட்டப்படி எவ்வளவு ஓட்டுநர்கள் வைக் வேண்டுமோ, அவ்வளவு ஓட்டுநர்கள் நாம் வைத்து இருக்கிறோம். ஆகவே, கூடுதல் பணி செய்ய வேண்டிய சூழ்நிலை இல்லை. ஒருவர் டியுடி முடித்து விட்டுப் போனால், அடுத்த நாள் பணிக்கு வேறு ஒரு ஓட்டுநர் வருவார்.

ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக அளிக்கப்பெற்ற பாடப் புத்தகங்கள்

*வினா எண். 547—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) அதனால் பயன் அடைந்த குழந்தைகள் எத்தனை பேர்?

(இ) இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களில் செயல் படுத்தத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் 1980-81-ம் ஆண்டில் அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 13,695.15 ஆகும்.

(ஆ) அதனால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 533 ஆகும்.

(இ) இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்குவது போல், உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்கும் வழங்குவதற்கு இத்திட்டத்தை விரிவு படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதுபோல், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் உதவித் தொகை அளிக்கப் படுகிறது. 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 18]

மாணவர்களுக்கு 25 ரூபாய் மாநில அரசு கொடுக்கிறது. 9–ம் வகுப்புக்கு மேல், மேல்பட்டப்படிப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 40 லிருந்து ரூ. 125 வரை கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையை தற்போது மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து, வழங்கிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை
வானொலி மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4–3–1982 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. இரகுமான்கான் அவர்கள் சென்னை வானொலி மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை பேரவையில் எழுப்பினார்.

சென்னை வானொலி நிலையம் 1.3.1982 அன்று மாலை 7மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டபோது எதிர்க்கட்சித் தலைவரின் கேள்வியையும், அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்பு செய்து இருக்கிறது, கேள்வி பதில் சம்பந்தமாக ஒரு பகுதியைச் சொல்லிவிட்டு மறு பகுதியை இருட்டடிப்பு செய்வது அவையின் உரிமை மீறிய செயலாகும் என்று பிரச்சனையை உறுப்பினர் எழுப்பினார்.

வானொலி நிலையத்தாருக்கு எழுதிக் கேட்டு பிறகு என்னுடைய தீர்ப்பை அளிப்பதாகச் சொன்னேன். இது குறித்த வானொலி இயக்குநருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. அவரது விளக்கத்தை பேரவைக்குப் படிக்கிறேன்.

'I am enclosing herewith a copy of the Assembly Review broadcast at 7 P.M. on 1.3.82 from this station. This contains the full script prepared for broadcast with certain portion edited for want of time. I want to assure you that the question and answer relating to Ganga-Cauvery Garland Canal project could not find place in the broadcast of the review only due to constraints of time factor and not due to any deliberate blackout or wilful omission of the proceedings on the part of A.I.R.